ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ பரமபதசோபானம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ பரமபதசோபானம் ॥

*சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்*
*பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று*
*தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு*
*வானேறப் போமளவும் வாழ்வு*

*வ்யாசீக்ருத்ய விமுக்தி ஸௌதபதவீ சோபாந சத்வர்ணநம்*
*சாரீரார்ணவ ரத்நசாதமிகய: ப்ராசீகசத் சர்வச: ।*
*தச்மிந் திஷ்டதி வேங்கடேச்வர கவௌ ஸ்ரீ பாஷ்யகாரோபமே*
*யம் கஞ்சித் புருஷம் க்யுபாசிதுமயோ மாகாமந: ச்வச்தி தே ॥*

*தச்மை நமோ஽ச்து குரவே தாத்ருச விபவாய வேங்கடேசாய ।*
*ப்ராவர்தயச்சநாநாம் பூமௌ பரமபத கர்ம்யசோபாநம் ॥*

*தேனேறு தாமரையாள் திருமார்பன் தன்*
*திண் அருளால் அவனடியில் விவேகம் பெற்றிங்கு*
*ஊனேறு பவக்குழியை வெறுத்ததற்பின்*
*ஊர் விரத்தியுடன் வினையின் திரளுக்கஞ்சிக்*
*கூனேறு பிறையிறையோன் சாபம் தீர்த்தான்*
*குரை கழலே சரணடைந்து குரம்பை விட்டு*
*வானேறும் வழிப்படிகள் அடைவே கண்ட*
*வண்புகழ்த் தூப்புல் வள்ளல் அருள் பெற்றோமே*

*‡அடல் புள் அரசினும்⋆ அந்தணர் மாட்டினும்⋆ இன்னமுதக்*
*கடற்பள்ளி தன்னினும்⋆ காவிரி உள்ளம் உகந்த பிரான்⋆*
*இடைப்பிள்ளை ஆகி உரைத்ததுரைக்கும்⋆ எதிவரனார்⋆*
*மடைப்பள்ளி வந்த மணம்⋆ எங்கள் வார்த்தையுள் மன்னியதே* (1)

*கள்ள மனத்துடன்⋆ கண்டு முயன்ற கடு வினையால்⋆*
*நள்ளிருள் ஆழியில்⋆ நற்சுவை ஐந்தென நாடிய ஓர்⋆*

அள்ளலில் நாளும்⋆ விழுந்தழியாவகை ஆரணநூல்⋆
வள்ளல் வழங்கிய⋆ வான் படியான வழியிதுவே (2)

அருவுருவானவை அனைத்தும் அறிவாரேனும்⋆
அருங்கலைகள் கற்றுரைக்க வல்லாரேனும்⋆
தரும வழி அழியாமல் காப்பாரேனும் ⋆
தனி மறையின் தாத்பரியம் தருவாரேனும்⋆
இருவினையின் ஒழுக்கத்தால் ஏவல் ஓராது⋆
இங்கே நாம் சிறையிருந்த ஈனம் தீர்க்கும்⋆
திருமகளார் பிரியாத தேவன் திண்ணம்⋆
தேறாதார் திண் படியில் ஏறாதாரே (3)

மறுத்தார் திருவுடன்⋆ மார்பில் தரித்தவன் வாசகத்தை⋆
மறுத்தார் மயக்கமும்⋆ மற்றதனால் வந்த மாநரகும்⋆
நிறுத்தார் பவத்தில்⋆ நெடுநாள் உழன்றமை கண்டதனால்⋆
வெறுத்தாரணநெறியே⋆ வெள்கியோட விரைவர்களே (4)

வான்பட்ட மன்னிருளில் மயங்குமாறும்⋆
மறித்தொருகால் எனையூழி சென்றால் அன்றோர்⋆
ஊன்பட்ட உடலாழி வினை ஒழுக்கில்⋆
ஒரு கரையும் காணாதே ஒழுகு மாறும்⋆
தேன் பட்ட விடம்போலத் தித்திக்கின்ற⋆
சிறுபயனே உறுபயன் என்றருந்துமாறும்⋆
தான் பட்டபடி இந்நேர் தானே கண்டு⋆
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே தக்கவாறே (5)

உலகத்துயர்ந்தவர்⋆ ஒன்றும் பயனில் உறும் துயரும்⋆
அலகில் படாத⋆ அப்போகம் கவர்ந்தெழும் அம்புயத்தோன்⋆
கலகத் தொழில் மது கைடபரால்⋆ படும் கட்டம் எண்ணில்⋆
பலகற்ற மெய்யடியார்⋆ படியார் இக்கடும் பவத்தே (6)

தந்திரங்கள் அளவிலராய்த் தனத்தால் மிக்க⋆
தார்வேந்தர் தொழவையம் ஆண்டார் மாண்டார்⋆

சந்திரனும் சூரியனும் வீயும் காலம்⋆
    தாரகையின் வடமுமற்றுத் தனிவானாளும்⋆
இந்திரனும் ஏறுயர்த்த ஈசன் தானும்⋆
    ஈரிரண்டு முகத்தானும் இல்லா அந்நாள்⋆
நம் திருமால் நிலை கண்டார் நாகமெல்லாம்⋆
    நரகென்று நற்பதமே நாடு வாரே (7)

துறவறமே துணிவார்⋆ துணுக்கற்ற இளம் துணிவோர்⋆
    உறவிலர் ஆதலின்⋆ நாம் உயர்ந்தாருடன் ஒன்றி நின்றோம்⋆
மறவழி மாற்றி⋆ எம் மையலைத் தீர்த்தவர் மன்னருளால்⋆
    கறவை உகந்த பிரான்⋆ கழல் சூடும் கருத்தினமே (8)

வந்தனபோல் வருவனவும் அனந்த மாகி⋆
    மாளாத துயர்தரு வல்வினை நெருப்புக்கு⋆
இந்தனமாய் எண்ணிறந்த காலம் எல்லாம்⋆
    இன்னமும் இப்பவக்குழிக்கே இழியா வண்ணம்⋆
வெந்ததொரு குழவியை நற்குமரனாக்கும்⋆
    வெறித்துளவ வித்தகனார் விதியே கொண்டார்⋆
பந்தனமாம் அவை அனைத்தும் பாறுகைக்குப்⋆
    பழ மறையின் பரமநெறி பயிலுவாரே (9)

கருமாலையில் வரும்⋆ கட்டம் கழிக்கும் கருத்துடையார்⋆
    ஒருமால் பெருகும்⋆ உயோகில் முயன்றும் அதன்றியும் நம்⋆
திருமால் அடியிணை⋆ திண் சரணாகும் என வரித்தும்⋆
    தருமால் இனியவை தானேயெனத்⋆ தகவெண்ணுவரே (10)

முன் செய்த வினைத்திரளில் முளைத்ததன்றி⋆
    முற்றுள்ள முதலரிந்து முளைத்த கூற்றில்⋆
தன்செய்ய திருவருளால் இசைவு பார்த்துத்⋆
    தழல் சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப்⋆
பின் செய்த வினையில் நினைவொன்றா தொன்றும்⋆
    பிழை பொறுத்து வேறுளது விரகால் மாற்றும்⋆
என் செய்ய தாமரைக்கண் பெருமான் எண்ணம்⋆
    எண்ணாதார் எட்டிரண்டும் எண்ணாதாரே (11)

உறையிட்ட வாளென⋆ ஊனுள் உறையும் யோகியரை⋆
நறைமட்டொழிவற்ற⋆ நற்றுளவேந்திய நாயகன் தான்⋆
நிறை மட்டிலாத⋆ நெடும்பயன் காட்ட நினைந்து⋆ உடலச்
சிறை வெட்டிவிட்டு⋆ வழிப்படுத்தும் வகை செய்திடுமே (12)

முன்கருவி ஈரைந்தும் மனத்தில் கூட்டி⋆
முக்கியமாமருத்தில் அவைசேர்த்ததெல்லாம்⋆
நன்குணரும் உயிரினில் சேர்த்தைம்பூதத்தை⋆
நண்ணுவித்துத் தான் தன்பால் வைக்கும் நாதன்⋆
ஒன்பதுடன் வாசல் இரண்டுடைத்தாய் உள்ளே⋆
ஒரு கோடி துயர்விளைக்கும் உடம்பாய் ஒன்றும்⋆
வன் சிறையின் தலைவாசல் திறந்து நம்மை⋆
வானேற வழிப் படுத்த மனமுற்றானே (13)

தெருளார் பிரமபுரத்திறை சேர்ந்து⋆ இடர் தீர்ந்தவர் தாம்⋆
மருளார் பிரமபுரச் சிறை தீர்ந்தபின்⋆ வந்தெதிர் கொண்டு⋆
அருளால் அமரர் நடத்த⋆ இம்மாயை கடந்ததன் பின்⋆
சுருளார் பவநரகச் சுழல்⋆ ஆற்றின் சுழற்சியிலே (14)

விழியல்லால் வேலில்லை விண்ணின் மாதர்⋆
மேனியல்லால் வில்லில்லை மீனவற்கு⋆
மொழியல்லால் அமுதில்லை என்று முன்னாள்⋆
முத்திவழி முனிந்தடைந்த மோகம் தீர்ந்தோம்⋆
கழியல்லால் கடலில்லை என்பார் போலக்⋆
காரியமே காரணமென்றுரைப்பார் காட்டும்⋆
வழியல்லா வழியெல்லாம் கடந்தோம் மற்றும்⋆
வானேறும் வழி கண்டோம் மகிழ்ந்திட்டோமே (15)

வன்பற்றுடன் மயல் பூண்டு⋆ மற்றோர் கதியால் இனநாள்⋆
என் பற்றது பெறும் தானமும்⋆ எத்தனை போதுளதாம்⋆
துன்பற்ற தன் துணிவால்⋆ துயர்தீர்க்கும் துழாய் முடியான்⋆
இன்புற்ற நல் வழியால்⋆ ஏற்று நற்பதம் எண்ணுவமே (16)

பண்டை இருவினை ஆற்றில் படிந்து⋆ பாரம்
காணாதே ஒழுகிய நாம் பாக்கியத்தால்⋆
வண்டமருமலர் மாதர் மின்னாய் மன்ன⋆
வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான்சேர்⋆
கொண்டல் அருள் மழை பொழிய வந்த தொப்பாம்⋆
குளிர்ந்து தெளிந்தமுதாய விரசை ஆற்றைக்⋆
கண்டணுகிக் கருத்தாலே கடந்து⋆ மீளாக்
கரை கண்டோர் கதி எல்லாம் கதித்திட்டோமே (17)

பூவளரும் திருமாது புணர்ந்த⋆ நம் புண்ணியனார்⋆
தாவளமான தனித்திவம் சேர்ந்து⋆ தமருடனே⋆
நா வளரும் பெரு நான்மறை⋆ ஓதிய கீதம் எல்லாம்⋆
பா வளரும் தமிழ்ப்⋆ பல்லாண்டிசையுடன் பாடுவமே (18)

அடலுரகம் உண்டுமிழ்ந்த அருக்கன் போல⋆
அழுக்கடைந்து கழுவிய நல் தரளம் போலக்⋆
கடலொழுகிக் கரை சேர்ந்த கலமே போலக்⋆
காட்டுத்தீக்கலந்தொழிந்த களிறே போல⋆
மடல்கவருமயல்கழிந்த மாதர் போல⋆
வன்சிறைபோய் மன்னர்பதம் பெற்றார் போல⋆
உடன்முதலா உயிர்மறைக்கும் மாயை நீங்கி⋆
உயர்ந்த பதமேறி உணர்ந்தொன்றினோமே (19)

‡மண்ணுலகில் மயல் தீர்ந்து மனம் ததும்பி⋆
மன்னாத பயன் இகந்து மாலேயன்றிக்⋆
கண் இலதென்றஞ்சி அவன்கழலே பூண்டு⋆
கடும் சிறை போய்க் கரையேறும் கதியே சென்று⋆
விண்ணுலகில் வியப்பெல்லாம் விளங்கக் கண்டு⋆
விண்ணவர் தம் குழாங்களுடன் வேதம் பாடிப்⋆
பண் உலகில் படியாத இசையால் பாடும்⋆
பல்லாண்டே பல்லாண்டும் பாடு வோமே (20)

‡மாளாத வினை அனைத்தும் மாளநாம் போய்⋆
வானேறி மலர்மகளார் அன்பு பூணும்⋆

தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு⋆
    தொழுதுகந்து தோத்திரங்கள் பாடியாடிக்⋆
கேளாத பழமறையின் கீதம் கேட்டுக்⋆
    கிடையாத பேரின்பம் பெருக⋆ நாளும்
மீளாத பேரடிமைக்கன்பு பெற்றோம்⋆
    மேதினியில் இருக்கின்றோம் விதியினாலே (21)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥